# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 88/மா/2025

**நாள்: 19.02.2026**

ஆர். விமலா மற்றும்
டாக்டர் பா. ராஜேந்திரன், நாமக்கல் --- முறையீட்டு மனுதாரர்கள்

ஆணையாளர்,
நாமக்கல் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

நாமக்கல், சேலம் ரோடு, முருகன் கோவில் பின்புறம், பொதிகை நகர், இரண்டாவது தெரு, எண் 13 A என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி ஆர். விமலா என்பவரின் 01.03.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.03.2025 அன்று பெறப்பட்டு 88/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து மேற்படி விலாசத்தில் வசிக்கும் திரு. பா. ராஜேந்திரன் என்பவரின் 16.09.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.09.2025 அன்று பெறப்பட்டும் மற்றும் 21.10.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.10.2025 அன்று பெறப்பட்டும், 88/மா/2025 என்ற முறையீட்டு மனுவுடன் இணைக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரர்களின் மனுக்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

நாமக்கல், சேலம் ரோடு, முருகன் கோவில் பின்புறம், பொதிகை நகர், இரண்டாவது தெரு, எண் 13 A என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி ஆர். விமலா என்பவரின் 01.03.2025 நாளிட்ட மனு மற்றும் திரு. பா ராஜேந்திரன் என்பவரின் 19.09.2025 மற்றும் 21.10.2025 நாளிட்ட மனுக்கள் ஆகியவற்றில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளனர்:-

"திருமதி ஆர். விமலா என்பவரின் 01.03.2025 நாளிட்ட மனு,

நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அளித்த குறை களைவு மனுவில்,

நாமக்கல் மாநகராட்சி சேலம் ரோடு முருகன் கோவில் பின்புறம் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் நடைபாதை காய்கறிக் கடைகளை அப்புறப்படுத்தக் கோரியும்,

பொதிகை நகர் பகுதியில், அதிக எண்ணிக்கையில் திரியும், பொது மக்களின் உயிருக்கு மிகுந்த அச்சுறுத்தலாக விளங்கும், தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தக் கோரியும்,

பொதிகை நகர் பகுதியில், புதர் போல் மண்டியிருக்கும் புல்பூண்டுகளை அகற்றி, அபரிதமாக உள்ள கொசுத் தொல்லையை ஒழிக்கக் கோரியும்,

பொதிகை நகர் இரண்டாவது தெருவின் முகப்பு நடுவில் இருக்கும் மின்கம்பத்தை அகற்றி, தெரு ஓரமாக மின்கம்பம் நிறுவக் கோரியும்,

09.11.2024 அன்று நான் அளித்த குறை களைவு மனு மீது இன்று (01.03.2025) வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததாலும்,

தமிழ்நாடு சட்டசபை மனுக்கள் குழு தலைவர் அவர்களுக்கு மேற்காணும் பொருள் குறித்து 18.12.2024 அன்று நான் அனுப்பிய குறை களைவு மனு மீது இன்று (01.03.2025) வரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாததாலும், 21.11.2024 அன்று 5.31 P.M. மணிக்கு , அலைபேசி எண்.90435 68699ல் இருந்து என்னைத் தொடர்பு கொண்ட பெயர் சொல்லாத ஒரு நபர், தான் நாமக்கல் மாநகராட்சியிலிருந்து பேசுவதாகக் கூறி நீங்கள் தான் புகார் கொடுத்ததா என மிரட்டும் தொனியில் கேட்டும், இங்கு நடை பாதை கடை ஏதும் இல்லை என்றும், மனு மீதான விசாரணைக்கு 22.11.2024 அன்று வருவதாகவும், நீங்கள் வீட்டிலேயே இருங்கள் எனத் தெரிவித்தார் என்பதையும்,

அலைபேசியில் அவர் கூறியபடி இன்று 01.03.2025 வரை விசாரணைக்கு வராததாலும் குறை களைவு மனுவின் மீது இன்று வரை நடவடிக்கை ஏதும் எடுக்காததாலும் அரசுக் கடிதம் எண்.6112/ஏ2/2018–1, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (எ) துறை நாள் 16.03.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.73, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (எ) துறை நாள் 11.06.2018–ல் குறை களைவு மனு பெறப்பட்ட நாளிலிருந்து அதிக பட்ச ஒரு மாதத்திற்குள் குறைகள் களையப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தும், அரசு அலுவலரான நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மேற்கண்ட அரசுக் கடிதம் மற்றும் அரசாணைகளை மதிக்காமல் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடனும் கெட்ட உள்நோக்கத்துடனும், 09.11.2024 நாளிட்ட எனது மனுவின் மீது 3 மாதத்திற்கு மேலாகியும் 01.03.2025 வரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கிடப்பில் போட்டிருப்பதாலும், நாமக்கல் மாநகராட்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் சில தகவல் வழங்கக்கோரி 18.01.2025ல் விண்ணப்பித்ததற்கும், பொது தகவல் அலுவலர் மற்றும் மாநகராட்சி மேலாளர் (பொ) அவர்கள் RV கோரிய தகவலை முழுமையாக அளிக்காமல் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 கீழ் சட்டப்பிரிவு 6(3)(ii)–ன்படி தகவல் இருக்கும் வேறு பொது அதிகார அமைப்பிற்கு மாற்றி அனுப்பாததாலும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005கீழ் சட்டப்பிரிவு 7(8) (iii)–ன்படி முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் விவரங்களை அவரது கடிதத்தில் RV தெரிவிக்காததாலும், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன்கீழ் தகவல் வழங்கக் கோரிய வரிசை எண்.5, 6க்கு பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய பதிலில் 21.11.2024 அன்று தங்களை கைபேசியில் அழைத்த நபர் ஒப்பந்த அடிப்படையில் பணி பார்க்கும் நபர் ஆவார் என தெரிவித்ததிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் பணி பார்க்கும் நபரே மிகுந்த அதிகாரத்துடனும் ஆணவத்துடனும் மிரட்டும் தொனியில் பேசுகின்றார் என்றால் நாமக்கல் மாநகராட்சியின் மற்ற அலுவலர்கள் பொதுமக்களிடம் நடந்து கொள்ளும் முறையை சொல்ல வேண்டிய தேவை இல்லை என்பதாலும் மிரட்டும் தொனியில் பேசிய நபர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்காமல் அவருக்கு ஆதரவாக செயல்படுவதாலும், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் தகவல் வழங்கக் கோரி 18.01.2025 அன்று விண்ணப்பித்த உடனேயே Town Planning Officer திருமதி பி.கலைவாணி அவர்களும் Sanitory Inspector திரு.பி.செல்வகுமார் அவர்களும் 21.01.2025 எங்களை நேரில் சந்தித்து நான் அளித்த குறை களைவு மனுவின் மீது நடவடிக்கை எடுப்பதாக உத்திரவாதம் அளித்தும் 21.01.2025 அன்று நேரில் சந்திக்கும் வரை தரையில் விரிக்கப்பட்டிருந்த நடைபாதை கடையின் அமைப்பை மாற்றி மூன்று Table Chair உடன் Steel Rack அமைத்து தற்போது ரோட்டோரத்தில் நிரந்தரமாக கடை போட்டு இருந்தனர். காய்கறிக் கடைக்காரர்களிடம் சில வாடிக்கையாளர்கள் வாக்குவாதம் செய்யும் போது மாநகராட்சி உயர் அதிகாரிகளுக்கும், காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும் பெருந்தொகையை மாதமாதம் லஞ்சம் கொடுத்து காய்கறி வியாபாரம்

செய்வதாகவும், எங்களை யாராலும் எதுவும் செய்ய முடியாது என கூறியது போல நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாததால் நாமக்கல் மாநகராட்சி கடைநிலை ஊழியர் முதல் ஆணையாளர் வரை லஞ்சம் ஒன்றையே குறிக்கோளாக செயல்பட்டு வருகின்றனர்.

28.10.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு அலுவலகம் சென்றபோது இரண்டு கவுண்டர்களிலும் வரி வசூல் செய்ய யாரும் இல்லை. கேட்டால் ஆய்வு கூட்டம் நடைபெற்றதாக கூறினர். இதனால் சொத்து வரி செலுத்த வந்தவர்கள் ஒரு மணிநேரம் காலதாமதமாக இருந்து கட்டணம் செலுத்தினர். சிலர் வீடுகளுக்கு திரும்பி சென்றனர். அரசுக்கு வரிவசூல் செய்வதில் கூட முறையாக செயல்படாமல் மெத்தனமாக இருந்து இறுதியில் அத்தியாவசியப்பணிகளைக்கூட ஒதுக்கி விட்டு வேறெந்த பணிகளையும் செய்யாமல் முழு மூச்சாக வரிவசூல் செய்வதையே வாடிக்கையாக இருந்ததால் எங்களது மனு மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதுடன் லஞ்சம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு செயல்பட்டு வரும் நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் திருமதி ரா. மகேஸ்வரி, Town Planning Officer திருமதி.பி.கலைவாணி மற்றும் Sanitory Inspector திரு.பி.செல்வகுமார் ஆகியோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க பொது நலன் வழக்கு தொடர அனுமதி வழங்குமாறும்,

எனது குறைகளைவு மனு மீது நடவடிக்கை எடுக்க நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு உத்தரவிடுமாறும், 2015ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (குற்றச்சாட்டு தாக்கல், விசாரித்தல் மற்றும் முடித்தல்) விதி 4ன்படி முறைமன்ற நடுவர், செயலாளர் அவர்களிடம், பதிவஞ்சலில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 3ன் கீழ் பணியமர்த்தம் செய்யப்பட்டிருக்கின்ற முறைமன்ற நடுவர் அவர்களுக்கு இக்குற்றசாட்டினை எழுத்துப்பூர்வமாக இரு நகல்களில் பணிவுடன் தாக்கல் செய்துள்ளேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், 18.03.2025, 21.03.2025, 19.09.2025 நாளிட்ட மின்னஞ்சல்களில் மேற்சொன்ன புகார்களையே குறிப்பிட்டு நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

<u>டாக்டர் பா. ராஜேந்திரன் என்பவரின் 16.09.2025 நாளிட்ட மனு,</u>

நாமக்கல் மாநகராட்சி ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு தகவலறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் சில தகவல் வழங்கக்கோரிய, 18.01.2025 நாளிட்ட எனது RTI மனுவிற்கு, நாமக்கல் மாநகராட்சி அலுவலகக் கடிதம் ந.க. எண் 180/2025/எச்1 நாள் 17.02.2025–ல் வழங்கிய அனுமதியின்படி, 20.03.2025 அன்று, நாமக்கல் மாநகராட்சி அலுவலகத்திற்குச் சென்று, தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டப் பதிவேடு மற்றும் கோப்பினைப் (கோப்பு எண் 4267/2022/எச்1) பார்வையிட்டு, அவற்றைக்குறிப்பெடுத்துக்கொண்டதுடன், மாநகராட்சி அலுவலர்களது அனுமதியுடன் அவற்றைப் புகைப்படங்களும் எடுத்துக் கொண்டேன்.

பதிவேடு மற்றும் கோப்பினை ஆய்வு செய்ததிலும், பொது மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையிலும், கீழ்காணும் முறைகேடுகள் கண்டறிப்பட்டு, அவற்றை இதன்வழி, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு, இத்துடன், பதிவு அஞ்சலில், எழுத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டு படிவம்–1 இணைத்து, தற்போது சமர்ப்பித்துள்ளேன்.

நாமக்கல் மாநகராட்சி மாமன்றப் பொருள் நாள் 24.01.2024–ல் தெரிவித்தபடி, தெருநாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்வதற்காக, நிதி ஒதுக்கீடு ரூ.8,50,000/– செய்யப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட, நாமக்கல் மாநகராட்சி மாமன்றத்தால் 24.01.2024–ல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு, Petcare foundation (Govt. Regn..

No.229/2018) No.2/3, D Type, First Floor, 16th Street, SIDCO Nagar, Villivakkam, Chennai-600 049 and Poulose Animal Resque and Welfare Trust, No.1/12, Ground Floor, Round Building, Collectors Nagar, Anna Nagar, West Estension, Chennai-600 101 என்ற, இரண்டு நிறுவனங்கள் மட்டுமே, ஒப்பந்தப் புள்ளிகளை (இரண்டுமே ஒரே தொகையைக் குறிப்பிட்டு) அளித்ததில் Petcare foundation அளித்த ஒப்பந்தப்புள்ளி, நாமக்கல் மாநகராட்சி மாமன்றப் பொருள் நாள் 20.02.2024–ல் நாமக்கல் மாநகராட்சி மாமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்கான செயல்முறை ஆணை, நாமக்கல் மாநகராட்சி ஆணையாளரால், 03.07.2024 மற்றும் 24.07.2024 தேதிகளில் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

முதல் தொகுதியில் (Batch), 154 (82 ஆண் + 72 பெண் = கூடுதல் 154) தெருநாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் 01.08.2024 முதல் 17.08.2024 முடிய மேற்கொண்டதாக, Petcare foundation முதல் பட்டியலை வழங்கி உள்ளது. (வரிசை எண் 1 முதல் 154 வரை எண்ணிடப்பட்ட, பக்க எண் 20 முதல் 30 வரை).

154 (82 ஆண் + 72 பெண் = கூடுதல் 154) தெருநாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாக, Petcare foundation 20.08.2024 நாளிட்ட கடிதம் மற்றும் ரூ.2,52,560/– (ரூ.2,47,508 + TDS ரூ.5052 = கூடுதல் ரூ.2,52,560) பெற்றுக் கொண்ட இரசீது ஆகியவற்றை நாமக்கல் மாநகராட்சியிடம் வழங்கியுள்ளது.

187 (100 ஆண் + 87 பெண் = கூடுதல் 187) தெருநாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாக, Petcare foundation 05.11.2024 நாளிட்ட கடிதம் மற்றும் ரூ.3,06,680/– (ரூ.3,00,546 + TDS ரூ.6134 = கூடுதல் ரூ.3,06,680/–) தொகையை வழங்கக் கோரிய கடிதம், நாமக்கல் மாநகராட்சியிடம் வழங்கி உள்ளது.

174 (96 ஆண் + 78 பெண் = கூடுதல் 174) தெருநாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாக, Petcare foundation 09.12.2024 நாளிட்ட கடிதம் மற்றும் ரூ.2,85,360/– (ரூ.2,79,652 + TDS ரூ.5708 = கூடுதல் ரூ.2,85,360/–) தொகையை வழங்கக் கோரிய கடிதம், நாமக்கல் மாநகராட்சியிடம் வழங்கி உள்ளது.

இரண்டாவது மற்றும் மூன்றாவது தொகுதியில் (Batch) 361 (196 ஆண் + 165 பெண் = கூடுதல் 361) தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் 19.10.2024 முதல் 09.12.2024 முடிய மேற்கொண்டதாக, Petcare foundation 09.12.2024 இரண்டாவது பட்டியல் வழங்கி உள்ளது.

361 (196 + 165 = கூடுதல் 361) தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதற்கான தொகையை வழங்கக் கோரிய கடிதத்தை, நாமக்கல் மாநகராட்சியிடம் Petcare foundation 09.12.2024 அன்று வழங்கி உள்ளது.

| | | |
|---|---|---|
| முதல் தொகுதிக்கான தவணைக் தொகை | – | ரூ.2,52,560 |
| 2–வது தொகுதிக்கான தவணைத் தொகை | – | ரூ.3,06,680 |
| 3–வது தொகுதிக்கான தவணைத் தொகை | – | ரூ.2,85,360 |
| மொத்தம் | – | ரூ.8,44,600 |
| 2% TDS | – | ரூ. 16,892 |
| ஆகத் தொகை | – | ரூ.8,27,708 தொகையை |

16.12.2024 அன்று பெற்றுக் கொண்டதற்கு, மொத்த தொகைக்கும் 16.12.2024 ஒரே ரசீதாக, நாமக்கல் மாநகராட்சியிடம் Petcare foundation வழங்கி உள்ளது.

மேற்கண்ட விவரங்கள் கொண்ட பதிவேடு மற்றும் கோப்புகளின் அடிப்படையிலும், பொது மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேரடி விசாரணை வாயிலாகவும், மிகப் பெரும் நிதி முறைகேடுகள் நடந்திருப்பதற்கான வலுவான ஆதாரங்கள் கீழ்க்கண்டவாறு தொகுக்கப்பட்டுள்ளது:–

01. நாமக்கல் மாநகராட்சி மன்றப் பொருள் நாள் 24.01.2024–ல், தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு வெளியிட, நாமக்கல் மாநகராட்சி மாமன்றத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு, Petcare foundation (Govt. Regn.. No.229/2018) No.2/3, D Type, First Floor, 16th Street, SIDCO Nagar, Villivakkam, Chennai-600 049 and Poulose Animal Resque and Welfare Trust, No.1/12, Ground Floor, Round Building, Collectors Nagar, Anna Nagar, West Estension, Chennai-600 101 என்ற, இரண்டு நிறுவனங்களும், ஒப்பந்தப் புள்ளிகளில் ஒரே தொகையைக் குறிப்பிட்டு அளித்ததில் Petcare foundation அளித்த ஒப்பந்தப் புள்ளி மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கான செயல்முறை ஆணை, நாமக்கல் மாநகராட்சி ஆணையாளரால் 03.07.2024 மற்றும் 24.07.2024 தேதிகளில் ஐந்து மாதங்களுக்குப் பிறகு செயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

02. தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்வதற்காக, ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.8,50,000–ல் சரியாக 515 தெரு நாய்களுக்குத் தொகை ரூ.8,44,600/– எனக் கணக்கிடப்பட்டுள்ளதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

03. தொகை வழங்கக் கோரிய கடிதத்தை, நாமக்கல் மாநகராட்சியிடம், Petcare foundation 09.12.2024 அன்று வழங்கிய 7–ஏழு நாட்களில், அவசர அவசரமாக ரூ.8,27,708 தொகை 16.12.2024 அன்று வழங்கப்பட்டுள்ளதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

04. தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்வதற்காக, 20.02.2024 அன்று அமைக்கப்பட்ட குழுவில், பிற துறை சார்ந்தவர்களும் அங்கத்தினர்களாக இருக்கும் போது, அவர்களை ஈடுபடுத்தாமல், எங்கே அவர்களை ஈடுபடுத்தினால் அவர்களுக்கும் லஞ்சப் பணத்தில் பங்கு கொடுக்க வேண்டியிருக்குமோ என்பதினால், முழு அங்கத்தினர்களையும் (பிற துறை சார்ந்தவர்கள்) ஈடுபடுத்தப்படாமலிருப்பதிலிருந்து மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

05. முதல் தொகுதியில் 154 (82 ஆண் + 72 பெண் = கூடுதல் 154) தெருநாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள், 01.08.2024 முதல் 17.08.2024 முடிய மேற்கொண்டதாக Petcare foundation முதல் பட்டியல் வழங்கி உள்ளது. முதல் தொகுதியில் குறிப்பிடப்பட்ட தெருக்களையே, இரண்டாவது மற்றும் மூன்றாவது தொகுதியில், வரிசை எண்களை மட்டும் மாற்றிப் போட்டு, அந்தத் தெருக்களில் உள்ள தெரு நாய்களை மட்டுமே, பல்வேறு தேதிகளில் பிடித்ததாகக் குறிப்பிட்டு, நாமக்கல் மாநகராட்சியில் உள்ள மற்ற தெருக்களில் உள்ள தெருநாய்களைப் பிடித்ததாகக் குறிப்பிடாமல்,

Petcare foundation, 361 (196 ஆண் + 165 பெண் = கூடுதல் 361) தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் 19.10.2024 முதல் 09.12.2024 முடிய மேற்கொண்டதாகத் தெரிவித்து, இரண்டாவது பட்டியல் வழங்கி உள்ளதிலிருந்து மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

06. முதல் தொகுதியில் 154 தெருநாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள், 01.08.2024 முதல் 17.08.2024 முடிய மேற்கொண்டதாக Petcare foundation முதல் பட்டியல் வழங்கி உள்ளது. முதல் தொகுதியில், குறிப்பிடப்பட்ட தெருக்களில் பிடிக்கப்பட்ட தெரு நாய்களையே இரண்டாவது மற்றும் மூன்றாவது தொகுதியில், அதே எண்ணிக்கை மாறாமல், அதே நிறம் மாறாமல், அதே வயது மாறாமல் உள்ள, அதே தெருநாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசி பணிகள் மேற்கொண்டதாக Petcare foundation, 361 தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் 19.10.2024 முதல் 09.12.2024 முடிய மேற்கொண்டதாகத் தெரிவித்திருப்பதிலிருந்து மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

07. மேற்காணும் குற்றச்சாட்டு வரிசை எண் 5 மற்றும் 6–ல் தெரிவித்துள்ளபடி, Petcare foundation வழங்கிய முதல் பட்டியலில் உள்ள, அதே நிறம், அதே வயது உள்ள, 154 தெரு நாய்களுக்கே அதே எண்ணிக்கை மாறாமல் தேதிகளை மட்டும் மாற்றிப் போட்டு Petcare foundation இரண்டாவது மற்றும் மூன்றாவது தொகுதியில், 361 தெரு நாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசி பணிகள் பல்வேறு தேதிகளில் மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளதிலிருந்து, இரண்டாவது மற்றும் மூன்றாவது தொகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ள தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளாமலேயே, 361 தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்ததிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

- முதல் தொகுதியில் A.S. பேட்டை மெயின் ரோடு பகுதியில், 01.08.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசி பணிகள் மேற்கொண்ட முதல் பட்டியல் வரிசை எண் 1, 3, 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 (2 ஆண் + 1 பெண் நாய் = 3) நாய்களும்,
- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், A.S. பேட்டை மெயின் ரோடு பகுதியில், 19.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசி பணிகள் மேற்கொண்ட இரண்டவாது பட்டியல் வரிசை எண் 21, 23, 24–ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 (2 ஆண் + 1 பெண் நாய் = 3) நாய்களும்,
- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், A.S. பேட்டை மெயின் ரோடு பகுதியில், 25.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசி பணிகள் மேற்கொண்ட இரண்டவாது பட்டியல் வரிசை எண் 155, 157, 158–ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 (2 ஆண் + 1 பெண் நாய் = 3) நாய்களும்,
- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், A.S. பேட்டை மெயின் ரோடு பகுதியில், 29.11.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசி பணிகள் மேற்கொண்ட இரண்டவாது பட்டியல் வரிசை எண் 309, 311, 312–ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 (2 ஆண் + 1 பெண் நாய் = 3) நாய்களும்,
- மேற்காணும் தெரு நாய்கள், ஒரே நிறம் (White, Black & White and Lite Pink) , ஒரே வயது (5, 2, 4) என ஒன்று போலக் குறிப்பிட்டு உள்ளதால்.

- 19.10.2024, 25.10.2024 மற்றும் 29.11.2024 தேதிகளில், இரண்டவாது பட்டியலில் உள்ள வரிசை எண்கள் 21, 23, 24, 155, 157, 158, 309, 311, 312–ல் காணும் 9–ஒன்பது தெருநாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளமலேயே, 9–ஒன்பது தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்திருப்பதிலிருந்து மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது தெளிவாகத் தெரிகிறது.

08. முதல் தொகுதியில், அர்த்தனாரி பள்ளி அண்ணா மேற்கு பள்ளி பகுதியில் 01.08.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, முதல் பட்டியல் வரிசை எண் 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆண் நாயும்,

- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், அர்த்தனாரி பள்ளி அண்ணா மேற்கு பள்ளி பகுதியில் 19.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 22–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆண் நாயும்,

- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், அர்த்தனாரி பள்ளி அண்ணா மேற்கு பள்ளி பகுதியில் 25.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 156–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆண் நாயும்,

- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், அர்த்தனாரி பள்ளி அண்ணா மேற்கு பள்ளி பகுதியில் 29.11.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 310–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆண் நாயும்,
- மேற்காணும் தெரு நாய், ஒரே நிறம் (Black) , ஒரே வயது (3) உள்ளதால். 19.10.2024, 25.10.2024 மற்றும் 29.11.2024 தேதிகளில் இரண்டாவது பட்டியலில் உள்ள வரிசை எண்கள் 22, 156, 310–ல் காணும் 3–மூன்று தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளாமலேயே 3–மூன்று தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்திருப்பதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது தெளிவாகத் தெரிகிறது.

09. முதல் தொகுதியில், முல்லை நகர் பகுதியில் 01.08.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, முதல் பட்டியல் வரிசை எண் 5,6,7–ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 ஆண் நாய்களும்,

- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், முல்லை நகர் பகுதியில் 19.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 25, 26, 27–ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 ஆண் நாய்களும்,

- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், முல்லை நகர் பகுதியில் 25.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 159, 160, 161–ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 ஆண் நாய்களும்,

- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், முல்லை நகர் பகுதியில் 29.11.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 313, 313, 315–ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 ஆண் நாய்களும்,

- மேற்காணும் தெரு நாய்கள், ஒரே நிறம் (1-Black & Gray, 2-Black and 3-Black & White), ஒரே வயது (5,3,2) என ஒன்று போலக்

குறிப்பிடப்பட்டுள்ளதால், 19.10.2024, 25.10.2024 மற்றும் 29.11.2024 தேதிகளில் இரண்டாவது பட்டியலில் உள்ள வரிசை எண்கள் 25, 26, 27, 159, 160, 161, 313, 314, 315–ல் காணும் 9–ஒன்பது தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளாலேயே 9–ஒன்பது தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்திருப்பதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது தெளிவாகத் தெரிகிறது.

10. முதல் தொகுதியில், கருங்கோட்டை பழனிசாமி தெரு பகுதியில் 01.08.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, முதல் பட்டியல் வரிசை எண் 8–ல் குறிப்பிடப்பட்டுள்ள 1 பெண் நாயும், 02.08.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட முதல் பட்டியல் வரிசை எண் 10,11–ல் குறிப்பிடப்பட்டுள்ள 2–இரண்டு ஆண் நாய்களும்,

- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், கருங்கோட்டை பழனிசாமி தெரு பகுதியில் 19.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 28, 30, 31–ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 (2 ஆண் + 1 பெண் = கூடுதல் 3) நாய்களும்,

- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், கருங்கோட்டை பழனிசாமி தெரு பகுதியில் 25.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 162–ல் குறிப்பிடப்பட்டுள்ள 1 பெண் நாயும், 26.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 164, 165–ல் குறிப்பிடப்பட்டுள்ள 2–இரண்டு ஆண் நாய்களும்,

  2–வது மற்றும் 3–வது தொகுதியில், கருங்கோட்டை பழனிசாமி தெரு பகுதியில் 29.11.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 316–ல் குறிப்பிடப்பட்டுள்ள 1 பெண் நாயும், 26.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 318, 319–ல் குறிப்பிடப்பட்டுள்ள 2–இரண்டு ஆண் நாய்களும்,

- மேற்காணும் தெரு நாய்கள், ஒரே நிறம் (1-White, 2-Black & Gray and 3 Gray), ஒரே வயது (4,2,4) என ஒன்று போலக் குறிப்பிடப்பட்டு உள்ளதால், 19.10.2024, 25.10.2024 மற்றும் 29.11.2024 தேதிகளில் இரண்டாவது பட்டியலில் உள்ள வரிசை எண் 28, 30, 31, 162, 164, 165, 316, 318, 319–ல் காணும் 9–ஒன்பது தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளாமலேயே, 9–ஒன்பது தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்திருப்பதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது தெளிவாகத் தெரிகிறது.

11. முதல் தொகுதியில், தில்லைபுரம் பகுதியில் 01.08.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, முதல் பட்டியல் வரிசை எண் 9–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆண் நாயும்,

- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், தில்லைபுரம் பகுதியில் 19.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 29–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆண் நாயும்,

- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், தில்லைபுரம் பகுதியில் 25.10.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 163–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆண் நாயும்,
- 2–வது மற்றும் 3–வது தொகுதியில், தில்லைபுரம் பகுதியில் 29.11.2024 அன்று கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்ட, இரண்டாவது பட்டியல் வரிசை எண் 317–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஆண் நாயும்,
- மேற்காணும் தெரு நாய், ஒரே நிறம் (Black & Gray), ஒரே வயது (3) என ஒன்று போலக் குறிப்பிடப்பட்டு உள்ளதால், 19.10.2024, 25.10.2024 மற்றும் 29.11.2024 தேதிகளில் 2–வது பட்டியலில் உள்ள வரிசை எண்கள் 29, 156, 310–ல் காணும் 3–மூன்று தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளாலேயே 3–மூன்று தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்திருப்பதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது தெளிவாகத் தெரிகிறது.

இரண்டாவது மற்றும் மூன்றாவது தொகுதியில் (Batch) உள்ள தெரு நாய்களில்,

12. திருச்செங்கோடு மெயின் ரோடு பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,
13. கருப்பண்ண தெரு பகுதியில், 3–மூன்று தெரு நாய்களுக்கும்,
14. சிவஞானம் தெரு பகுதியில், 9–ஒன்பது தெரு நாய்களுக்கும்,
15. கணேஷ்புரம் 1வது 2வது குறுக்கு தெரு பகுதியில், 9–ஒன்பது தெரு நாய்களுக்கும்,
16. புதூர் தெரு பகுதியில், 12–பன்னிரெண்டு தெரு நாய்களுக்கும்,
17. கல்லரை தெரு பகுதியில், 9–ஒன்பது தெரு நாய்களுக்கும்,
18. துரையூர் ரோடு பகுதியில், 12–பன்னிரெண்டு தெரு நாய்களுக்கும்,
19. மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் – டோலர்ஸ் மைதானம் பகுதியில், 9–ஒன்பது தெரு நாய்களுக்கும்,
20. நல்லிபாளையம் ஏர்ஹஸ காலனி பகுதியில், 9–ஒன்பது தெரு நாய்களுக்கும்,
21. பிள்ளையார் கோவில் தெரு பகுதியில், 9–ஒன்பது தெரு நாய்களுக்கும்,
22. கணேஷ்புரம் மெயின் ரோடு பகுதியில், 9–ஒன்பது தெரு நாய்களுக்கும்,
23. தமிழ்மன்ற தெரு பகுதியில், 9–ஒன்பது தெரு நாய்களுக்கும்,
24. கலை கல்லூரி மெயின் ரோடு பகுதியில், 9–ஒன்பது தெரு நாய்களுக்கும்,
25. அன்பு நகர் மெயின் ரோடு 1 2வது தெரு பகுதியில், 9–ஒன்பது தெருநாய்களுக்கும்,
26. கெண்டி செட்டிபட்டி கணபதி நகர் பகுதியில், 7–ஏழு தெரு நாய்களுக்கும்,
27. அருந்ததியம் தெரு பகுதியில், 8–எட்டு தெரு நாய்களுக்கும்,
28. அசோக் நகர் 1, 2 மெயின் ரோடு பகுதியில், 8–எட்டு தெரு நாய்களுக்கும்,
29. போதுப்பட்டி மாரியம்மன் கோவில் பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,
30. போதுப்பட்டி காலனி பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,
31. பழைய நரிக்குறவர் காலனி பகுதியில், 8–எட்டு தெரு நாய்களுக்கும்,
32. குடித் தெரு பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

33. மாதாகோவில் தெரு கணேஷ்புரம் பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

34. P.N.R. மருத்துவமனை ரோடு பகுதியில், 8–எட்டு தெரு நாய்களுக்கும்,

35. கவிஞர் ரா மாணிக்கம் அரசு மகளிர் கல்லூரி பகுதியில், 8–எட்டு தெரு நாய்களுக்கும்,

36. சங்கரன் ரோடு பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

37. திருச்செங்கோடு சென்டர் ஸ்கூல் பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

38. அழகம்மாள் மருத்துவமனை பகுதியில், 8–எட்டு தெரு நாய்களுக்கும்,

39. தேவேந்திரபுரம் மெயின் ரோடு பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

40. வ.உ..சி. நகர் பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

41. சேலம் மெயின் ரோடு பஸ் ஸ்டாப் பகுதியில், 2–இரண்டு தெரு நாய்களுக்கும்,

42. காமராஜர் நகர் பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

43. பாரதியார் நகர் பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

44. பென் நகர் மேற்கு காலனி மெயின் ரோடு பகுதியில், 2–இரண்டு தெரு நாய்களுக்கும்,

45. அன்னை சத்யா நகர் பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

46. செட்டிலம் தெரு பகுதியில், 8–எட்டு தெரு நாய்களுக்கும்,

47. ரோஜா நகர் காலனி மெயின் ரோடு பகுதியில், 4–நான்கு தெரு நாய்களுக்கும்,

48. A.S. பேட்டை மெயின் ரோடு பகுதியில், 2–இரண்டு தெருநாய்களுக்கும்,

49. தேவேந்திர புரம் போஜா நகர் பகுதியில், 8–எட்டு தெரு நாய்களுக்கும்,

50. கொல்லாம்பட் செட்டியார் தெரு சிவன் கோவில் பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

51. அமச்சி அம்மன் கோவில் பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

52. சின்ன முதலிபட்டி பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

53. சேந்தமங்கலம் ரோடு குட்டை தெரு பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

54. பாலூட்டி தெரு அஜின் தெரு பகுதியில், 4–நான்கு தெரு நாய்களுக்கும்,

55. புது அக்ரம் ரோடு ஆஞ்சிநேயர் கோவில் பகுதியில், 2–இரண்டு தெரு நாய்களுக்கும்,

56. மஜ்ஜித் தெரு குறுக்கு தெரு பகுதியில், 6–ஆறு தெரு நாய்களுக்கும்,

57. எம்.ஜி.ஆர் காலனி மெயின் ரோடு பகுதியில், 4–நான்கு தெரு நாய்களுக்கும்,

58. குட்டை தெரு இரயில்வே நிலையம் சுடுகாடு பகுதியில், 10–பத்து தெரு நாய்களுக்கும்,

59. போதுப்பட்டி காலனி 1 2 3வது தெரு பகுதியில், 2–இரண்டு தெரு நாய்களுக்கும்,

60. பெரியம்பட்டி மெயின் ரோடு பகுதியில், 2–இரண்டு தெரு நாய்களுக்கும்,

61. பாடி தெரு பேட்டை அண்ணா பூங்கோதை தெரு பகுதியில், 2–இரண்டு தெரு நாய்களுக்கும்,

62. அன்சி அம்மா கோவில் பாறை தோட்டம் பகுதியில், 2–இரண்டு தெரு நாய்களுக்கும்,

63. ஆக 361 தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளாமலேயே 361 தெரு நாய்களுக்கும் கருத்தடை மற்றும் தடுப்பூசிப்

பணிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்திருப்பதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

64. ஒரே நாய்க்கே, இரண்டு அல்ல மூன்று முறை கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்திருப்பதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஒரே நாய்க்கே, இரண்டு/மூன்று முறை கருத்தடை என்பது உலக அதிசயமாகும்.

65. நாமக்கல் மாநகராட்சியில் கருத்தடை மேற்கொள்வதற்காக ஒரே சமயத்தில் 199 ஆண் தெரு நாய்கள் மட்டுமே பிடிக்கப்பட்டதாகக் கணக்கு காட்டப்பட்டுள்ளதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்று உள்ளதென்பது தெளிவாகத் தெரிகிறது. ஒரு பகுதியில் ஒரே இன (ஆண்) நாய்களை மட்டும் தேடித் தேடிப் பிடிக்கப்பட்டதாகக் கணக்குக் காட்டப்பட்டுள்ளது.

66. நாமக்கல் மாநகராட்சியில் கருத்தடை மேற்கொள்வதற்காக ஒரே சமயத்தில் 181 பெண் தெரு நாய்கள் மட்டுமே பிடிக்கப்பட்டதாகக் கணக்குக் காட்டப்பட்டுள்ளதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்று உள்ளதென்பது தெளிவாகத் தெரிகிறது. ஒரு பகுதியில் ஒரே இன (பெண்) நாய்கள் மட்டும் தேடித் தேடிப் பிடிக்கப்பட்டதாகக் கணக்குக் காட்டப்பட்டுள்ளது.

67. நாமக்கல் மாநகராட்சியில் கருத்தடை மேற்கொள்வதற்காக ஒரே சமயத்தில் ஒருசேர பிடிக்கப்பட்ட 132 (76 M + 56 F) தெரு நாய்கள் பிடிக்கப்பட்டதாகக் கணக்குக் காட்டப்பட்டுள்ளதிலிருந்து, மிகப்பெரும் நிதி முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஒரு சில பகுதியில் மட்டுமே, ஆண் பெண் நாய்கள் சேர்த்துப் பிடிக்கப்பட்டுள்ளது. அதுவும் மிக சொற்ப எண்ணிக்கையிலேயே, கணக்குக் காட்டப்பட்டுள்ளது.

நாமக்கல் மாநகராட்சியிலிருந்து, 06.08.2025 அன்று மாலை, பொதிகை நகர்–முதல் தெருவில் நாய் பிடிப்பதற்காக, நாய் வண்டி வந்தது. ஒரு நாயை மட்டும் பிடித்துவிட்டு, ஒரு மணி நேரத்திற்கும் மேல், மற்ற நாய்களைப் பிடிப்பது போல வித்தை காட்டிவிட்டு, தெருவில் வித்தை காட்டி பிச்சை எடுத்து பிழைப்பு நடத்துபவர்கள் செய்யும் செயலைப் போல, பாவலா செய்துவிட்டு, எந்தவொரு நாயையும் பிடிக்காமல் சென்றுவிட்டார்கள். ஒரு மாதமாகியும், அவர்கள் இப்பகுதிக்கு மீண்டும் வரவே இல்லை. இந்நேரம் பல நாய்கள் பிடித்ததாக, பொய்க்கணக்குக எழுதி அரசு நிதியைக் கொள்ளையடித்திருப்பார்கள். நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் திரு. சிவகுமார் மற்றும் துப்புரவு அலுவலர் திரு. திருமூர்த்தி ஆகிய இருவரும் 11.09.2025 தினமலர் நாளிதழுக்கு, 1060 தெரு நாய்கள் பிடிக்கப்பட்டதாகத் தகவல் தெரிவித்துள்ளார்கள். இவர்கள் பொய்க் கணக்கு கொடுத்துள்ளனர். அதை நிரூபிக்க பொது மக்களிடம் விசாரணை மேற்கொண்டு, அதன் விவரம் என்னிடம் உள்ளது. 06.08.2025 அன்று எடுக்கப்பட்ட நாய் வண்டியின் புகைப்பட நகல் இணைக்கப்பட்டுள்ளது.

361 தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசி மேற்கொள்ளாமலேயே மேற்கொண்டதாகத் தெரிவித்து, நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் திரு. சிவகுமார் மற்றும் துப்புரவு அலுவலர் திரு. திருமூர்த்தி ஆகிய இருவரும் மிகப் பெரும் முறைகேடு செய்துள்ள நிலையில், இவர்கள் இருவரும் பரம யோக்கியர்கள் போலவும், பொது மக்கள் மீது குறை இருப்பது போலவும், தினசரி நாளிதழில், ''தெரு நாய்களைப் பிடிப்பதற்கு பொது மக்கள் தடை செய்யக்கூடாது'' எனத் தெரிவித்திருப்பது சரியான தில்லுமுல்லு ஆகும். தடை செய்யும் பொது மக்களுக்கு ரூ.25,000 முதல் ரு.2 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும் என்பது

அதிகாரத் திமிராகும். இவர்கள் லஞ்சம் பெற்றுக் கொண்டும், அரசு நிதியை முறையாக செலவழிக்காமலும், அரசு நிதியைக் கொள்ளையடிக்கும் இவர்களுக்கு யார் அபராதம் விதிப்பது? லஞ்சம் வாங்கிக் கொண்டு பணி செய்யும் அரசு அதிகாரிகள் குறித்து மாண்பமை உயர்நீதி மன்றம் லஞ்சம் வாங்குவதற்குப் பதில் தெருவில் பிச்சை எடுக்கலாம் எனக் கடுமையாகச் சாடியுள்ளது. அப்படியிருந்தும் இது போன்ற ஜென்மங்கள் லஞ்சம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றன. செயல்பட்டு வருகின்றன.

தெரு நாய்களைப் பிடிப்பதற்கு பொது மக்கள் பெருமளவில் ஆதரவு தெரிவித்து வரும் நிலையில், உண்மைக்கு மாறாக, நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் திரு. சிவகுமார் மற்றும் துப்புரவு அலுவலர் திரு. திருமூர்த்தி ஆகிய இருவரும், அவர்கள் செய்துள்ள, செய்து வரும் மிகப் பெரும் முறைகேட்டினை மறைப்பதற்காக, மறைக்கும் எண்ணத்துடன், விளம்பர நோக்கத்துடன், ''தெரு நாய்களைப் பிடிப்பதற்கு பொது மக்கள் தடை செய்யக் கூடாது'' என 11.09.2025 நாளிட்ட தினசரி நாளிதழில் தெரிவித்திருப்பது சரியான தில்லுமுல்லு ஆகும். தெருநாய்கள் அன்றாடம் மனிதர்களைக் கடித்தது பற்றிய செய்தி, பெருமளவில் நாடெங்கும் வந்து கொண்டிருக்கும் நிலையில், வாழ்வியல் பிரச்சனையாக உருவெடுத்துள்ள நிலையில், இதுபோன்ற பொய்த் தகவல்களை அறிக்கையாக வெளியிடும் இவர்கள் மனிதர்களா என்பதே கேள்வி.

10.09.2025 நாளிட்ட தினசரி நாளிதழில் ''ராசிபுரத்தில் சிறுமியின் காதைக் கடித்துக் குதறிய தெருநாய்'' என்ற செய்தியும், 14.09.2025 நாளிட்ட தினசரி நாளிதழில் ''இடைப்பாடியில் தெருநாய் கடித்து ஆர்டிஓ உட்பட 3 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி'' என்ற செய்தியும், 15.09.2025 நாளிட்ட தினசரி நாளிதழில் ''நாடு முழுவதும் வெறிநாய்க்கடி பிரச்னை'' என்ற செய்தியும், ''மும்பை அருகே ஒரே நாளில் 67 நாய்க்கடி சம்பவங்கள்'' என்ற செய்தியும், ''ரேபிஸ் பாதிப்பு ஒருவர் உயிரிழப்பு'' என்ற செய்தியும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சி செய்திகளிலும், தினசரி நாளிதழிலும், தினசரி வெறிநாய் நோய்க்கடி பற்றியும், தெருநாய்கள் அன்றாடம் மனிதர்களைக் கடித்தது பற்றிய செய்தி நாடெங்கும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் நிலையில், வாழ்வியல் பிரச்சனையாக உருவெடுத்த நிலையில், ''எறிகின்ற வீட்டில் பிடுங்குவது ஆதாயம்'' என்பது போல நாமக்கல் மாநகராட்சி தற்போதைய ஆணையாளர் திரு. சிவக்குமார், முன்னாள் ஆணையாளர் திருமதி மஹேஸ்வரி, நகரத் திட்ட அலுவலர் திருமதி கலைவாணி, துப்புரவு அலுவலர் திரு. திருமூர்த்தி, துப்புரவு ஆய்வாளர் திரு. செல்வகுமார் மற்றும் H1 இருக்கை எழுத்தர் திருமதி சரண்யா ஆகியோர் தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளாமலேயே, தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்து, மேற்படி திட்டத்தில் மிகப் பெரும் முறைகேடு செய்துள்ள செயல்பாடு சமூக விரோதச் செயலாகும்.

எனது குற்றச்சாட்டின் தன்மையைக் கருத்தில் கொண்டு நாட்டின் தலையாயப் பிரச்சனையாக உள்ள தெருநாய்களின் அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு எனது புகாரின் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளாமலேயே, தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்து, மேற்படி திட்டத்தில் மிகப் பெரும் முறைகேடு செய்துள்ள செய்து வருகின்ற சமூக விரோதிகளான நாமக்கல் மாநகராட்சி தற்போதைய ஆணையாளர் திரு. சிவக்குமார், முன்னாள் ஆணையாளர் திருமதி மஹேஸ்வரி, நகரத் திட்ட அலுவலர் திருமதி கலைவாணி, துப்புரவு அலுவலர் திரு. திருமூர்த்தி, துப்புரவு ஆய்வாளர் திரு. செல்வகுமார் மற்றும் H1 இருக்கை

எழுத்தர் திருமதி சரண்யா ஆகிய சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமாகவும், துறை ரீதியான நடவடிக்கைக்குப் பரிந்துரைக்க வேண்டுமாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

எனது குற்றச்சாட்டிற்கு வலு சேர்க்கும் விதத்தில் ஆதாரங்களாக (1) நாமக்கல் மாநகராட்சியில், 01.08.2024 முதல் 17.08.2024 முடிய மற்றும் 19.10.2024 முதல் 09.12.2024 முடிய மேற்கொள்ளப்பட்ட ஆதாரங்கள் இத்துடன் இணைத்துள்ளேன்.

எனது குற்றச்சாட்டின் மீது ஏதேனும் விசாரணை நடைபெறுமாயின், அதுசமயம் என்னிடம் உள்ள அனைத்து ஆதாரங்களையும் சமர்ப்பிக்கிறேன் என்பதை இதன்வழி உறுதியளிக்கிறேன்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு 01.03.2025 அன்று பதிவு அஞ்சலில் எனது மனைவி திருமதி விமலா அனுப்பிய எழுத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டு படிவம்–1, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.03.2025 அன்று பெறப்பட்டு, முறைமன்ற நடுவத்தில், முறையீட்டு மனு எண் 88/மா/2025 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் காலங்கடத்தாமல், முறையீட்டு மனு எண் 88/மா/2025 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுடன் எனது இந்தக் குற்றச்சாட்டையும் சேர்த்து, இரண்டு குற்றச்சாட்டின் மீதும், ஒரே நாளில், ஒரே நேரத்தில் விரிவான விசாரணை மேற்கொள்ள வேண்டுமாய் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.''

<u>திருமதி ஆர். விமலா மற்றும் டாக்டர் பா. ராஜேந்திரன் ஆகியோரின் 21.10.2025 நாளிட்ட புகார் மனு</u>

நாங்கள் இதன்வழி பணிவுடன் தெரிவிப்பது யாதெனில், நாமக்கக்ல மாவட்டம், நாமக்கல் மாநகராட்சி, சேலம் ரோடு, முருகன் கோவில் பின்புறம், போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் நடைபாதை காய்கறிக்கடைகளை அப்புறப்படுத்தக் கோரியும், அதிக எண்ணிக்கையில் திரியும் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தக்கோரியும், அபரிதமாக உள்ள கொசுத் தொல்லையை ஒழிக்கக் கோரியும், பொதிகை நகர் 2வது தெருவின் நடுவில் இருக்கும் மின்கம்பத்தினை தெரு ஓரமாக நிறுவக் கோரியும் 09.11.2024 அன்று நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அளித்த தனது குறைகளைவு மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி திருமதி ஆர்.விமலா அளித்த எழுத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டு படிவம் 1, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.03.2025 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.88/மா/2025 ஆக பதிவு செய்து எனது முறையீட்டு மனு மீது 7 மாதத்திற்கும் மேலாகியும் 21.10.2025 வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

09.11.2024 அன்று, நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அளித்த தனது குறைகளைவு மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு திருமதி ஆர்.விமலா 15.03.2025 அன்று அளித்த புகார் மீது 7 மாதமாகியும் 21.10.2025 வரை எவ்வித நடவடிக்கை எடுக்காமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாமக்கல் மாநகராட்சியில் தெரு நாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் ரூ.8,50,000/–க்கு நடந்த நிதி முறைகேடுகள் குறித்து மாநாகராட்சி ஆணையாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி 17.09.2025 அன்று டாக்டர் பா.ராஜேந்திரன் அளித்த எழுத்து தாக்கல் செய்யப்பட்ட 16.09.2025 நாளிட்ட குற்றச்சாட்டு படிவம் 1 தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில்

19.09.2025 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்ட எண்.1538/மா/2025 மீது ஒரு மாதத்திற்கு மேலாகியும் இன்று 21.10.2025 வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாமக்கல் மாநகராட்சியில் தெரு நாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் ரூ.8,50,000/–க்கு நடந்த நிதி முறைகேடுகள் குறித்து மாநாகராட்சி ஆணையாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநர், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோருக்கு 17.09.2025 அன்று டாக்டர் பா.ராஜேந்திரன் அளித்த 16.09.2025 நாளிட்ட புகார் மீது ஒரு மாததிற்கும் மேலாகியும் இன்று 21.10.2025 வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. எங்கள் புகார் மனு மீது 7 மாதங்கள் கடந்த நிலையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர், நகராட்சி நிர்வாக ஆணையர், நாமக்கல் மாவட்ட ஆட்சி தலைவர் மற்றும் ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநர் ஆகியோர் எங்கள் புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் ஊழல் பேர்வழிகளுக்கும், தவறு செய்தவர்களுக்கும் ஆதரவாக செயல்பட்டு வருகின்றீர்கள் என நாங்கள் அனைவரின் மீதும் நேரடியாக குற்றம் சாட்டுகிறோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாங்கள் இதன்வழி பணிவுடன் தெரிவிப்பது யாதெனில், நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் செய்த ஊழலில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் செயலர் அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகிய தங்கள் மூவருக்கும், பங்கீடு உள்ளதாலேயே, தவறு செய்தவர்களுக்கும் ஊழல்வாதிகளுக்கும் ஆதரவாக, தாங்கள் செயல்பட்டு வருகிறீர்கள் என தங்கள் அனைவரின் மீதும் நேரடியாக குற்றம் சாட்டுகிறோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசுக் கடிதம் எண்.6112/ஏ2/2018–1, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (ஏ) துறை நாள் 16.03.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.73, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (ஏ) துறை நாள் 11.06.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.25 மனித வள மேலாண்மைத் (ஏ) துறை நாள் 04.08.2025ல் குறை களைவு மனு புகார் மனு பெறப்பட்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் மனுவை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை உடனடியாக அனுப்பப்பட வேண்டும் என்றும் குறைகளைவு மனு புகார் பெறப்பட்ட நாளிலிருந்து அதிக பட்சமாக ஒரு மாதத்திற்குள்ளாக குறைகள் களையப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசு அலுவலரான தாங்கள், தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் செயலர் அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள், ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநர் அவர்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆகிய தாங்கள் நால்வரும், மேற்கண்ட அரசுக் கடிதம் மற்றும் அரசாணை போன்ற எந்த ஒரு அரசாணைகளையும் மதிக்காமலிருப்பது நியாயமில்லை.

தவறு செய்தவர்களுக்கும், ஊழல்வாதிகளுக்கும் ஆதரவாக செயல்பட்டு வரும் தாங்கள் 30.11.2025க்குள் எங்களது புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு நடவடிக்கை விவரத்தை எங்களுக்கு தெரியப்படுத்தப்படாவிட்டால் தங்களது சேவை குறைபாடு (Lack of Servce), பணி ஒழுங்கீனத்திற்காகவும் (Duty Disorder) தாங்கள் கடமையைச் செய்யாமல் வேண்டுமென்றே கெட்ட உள்நோக்கத்துடன் செயல்பட்டு வருவதாகவும் (Failure of Duty Consciousness with Bad Intention) கண்காணிப்புப் பணியில் உள்ள தங்களது கண்காணிப்பு குறைபாட்டிற்கு (Lack of Supervision) ஊழல்பேர்வழிகளுக்கும், தவறு செய்தவர்களுக்கும் ஆதரவாக செயல்பட்டு வருவதாகவும் (For supporting corruptive officers) அரசுக் கடிதம் எண்.6112/ஏ2/2018–1, பணியாளர் மற்றும் நிருவாக

சீர்திருத்தத் (ஏ) துறை நாள் 16.03.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.73, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (ஏ) துறை நாள் 11.06.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.25 மனித வள மேலாண்மைத் (ஏ) துறை நாள் 04.08.2025ல் குறிப்பிட்டுள்ளவாறு எங்கள் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காததால், அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதால் இந்திய அரசியலமைப்பு குடியுரிமை அடிப்படைச் சட்டத்தையும், அரசு விதிமுறைகளையும், அரசாணைகளையும் மதிக்காமல் தங்கள் மீது தவறு செய்தவர்களுக்கும், ஊழல்வாதிகளுக்கும் ஆதரவாக செயல்பட்டு வரும் 21.10.2025 அன்று 7 மாதங்கள் வரை எவ்வித நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் அரசு அலுவலரான தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர், நகராட்சி நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சி தலைவர் மற்றும் ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநர் ஆகிய நால்வரும் இந்திய குடியுரிமைச் சட்டம் Article 226ன் கீழ் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் செயலுறுத்தம் நீதிப்பேராணை (Writ of Mandamus) வழக்கு தொடர இந்த அறிவிப்பு கடிதம் (Notice) மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாங்கள் இதன் வழி பணிவுடன் தெரிவிப்பது யாதெனில், இந்த அறிவிப்பு (Notice) தங்கள் அனைவருக்கும் கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அல்லது 30.11.2025க்குள் எங்களது புகார் மனு மீது மேலும் காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் விவரத்தை எங்களுக்கு தெரியப்படுத்தப்படாவிட்டால் அதனால் ஏற்படும் அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் தாங்களே முழு பொறுப்பாவீர்கள் என்பதையும், இதன் மூலம் தங்கள் அனைவருக்கும் மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.'' எனத் தெரிவித்துள்ளனர்.

2. மேற்கண்ட திருமதி ஆர். விமலா என்பவரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 27.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாமக்கல் மாநகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் தனது 06.06.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

``நாமக்கல் மாநகராட்சி சேலம் ரோடு முருகன் கோவில் பின்புறம் உள்ள இடத்தில் தற்காலிகமாக சாலையோரம் அமைக்கப்பட்டிருந்த காய்கறி கடைகள் நாமக்கல் மாநகராட்சி அலுவலக பணியாளர்களைக் கொண்டு அப்புறப்படுத்தப்பட்டது. மேலும், இனிவரும் காலங்களில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் கடைகள் அமைத்திட கூடாது என சம்பந்தப்பட்ட சாலையோர வியாபாரிகளை எச்சரிக்கப்பட்டது. மேலும், காய்கறி கடை போக்குவரத்திற்கு எவ்வித பாதிப்புமில்லாமல் நடத்தப்பட்டது.

நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 28.02.2025 முதல் 23.03.2025 முடிய சுற்றித் திரிந்த மொத்தம் 609 தெருநாய்களை பிடித்து இனப்பெருக்க கருத்தடை செய்யப்பட்டு, வெறிநாய் தடுப்பூசி அளிக்கப்பட்டு விதிகளின்படி பிடித்த இடத்திலேயே விடப்பட்டுள்ளது. தொடர்ந்து தெருநாய்களுக்கான இனப்பெருக்க கருத்தடை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பொது இடங்களில் புதர்போல் மண்டியிருக்கும் புல் பூண்டு செடிகளை அவ்வப்போது அந்தந்த பகுதிகளில் கூட்டு தூய்மை பணி (Mass Cleaning) நடத்தி தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வாரம் ஒருமுறை சாலையோரம் படர்ந்துள்ள புல் பூண்டு செடிகளை புல் வெட்டும் கருவி மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

மனுதாரர் தெரிவித்துள்ள பகுதி தெரு முகப்பில் அமைந்துள்ள தெருவிளக்கு கம்பத்தினை அப்புறப்படுத்துதல் என்பது தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாகும். நாமக்கல் மாநகராட்சியால் மேற்கொள்ள

வழிவகை இல்லை. மேலும், மேற்படி தெருவிளக்கு கம்பத்தினால் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் இல்லை.

09.11.2024ம் தேதிய குறை களைவு மனுவில் தெரிவிக்கப்பட்ட அதே குறைபாடுகளை தமிழ்நாடு சட்ட சபை மனுக்கள் குழு தலைவர் அவர்களிடம் வழங்கப்பட்ட மனு நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் வழியாக 04.04.2025 அன்று வரப்பெற்றதின்படி சம்பந்தப்பட்ட இடம் நேராய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு சட்டசபை மனுக்கள் குழுவிடம் வழங்கப்பட்ட விண்ணப்பமாக உள்ளதால், அதற்கான உரிய பதில் அறிக்கையினை நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 22.04.2025 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான உரிய பதில் மனுதாரருக்கு நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு சட்ட சபை மனுக்கள் குழுத் தலைவர் அவர்களிடம் வழங்கப்பட்ட மனு நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் வழியாக 04.04.2025 அன்று வரப்பெற்றதின்படி சம்பந்தப்பட்ட இடம் நேராய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு சட்ட சபை மனுக்கள் குழுவிடம் வழங்கப்பட்ட விண்ணப்பமாக உள்ளதால், அதற்கான உரிய பதில் அறிக்கையினை நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 22.04.2025 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான உரிய பதில் மனுதாரருக்கு நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

நகரமைப்பு ஆய்வாளர் அவர்களால் மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகளை நேராய்வு செய்து குறை களைவு நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டதால், மனுதாரரை 22.11.2024 அன்று விசாரணை செய்ய செல்லவில்லை.

முறையீட்டாளரின் கணவரான திரு. டாக்டர் ராஜேந்திரன் என்பவரால் அனுப்பி வைக்கப்பட்ட 18.01.2025ம் தேதியிட்ட தகவல் உரிமை சட்டம் 2005ன் மனுவிற்கு உரிய தகவல் மனுதாரருக்கு 17.02.2025 அன்று அனுப்பப்பட்டு, மனுதாரரால் 21.02.2025 அன்று பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மனுதாரரின் கணவர் திரு. டாக்டர் ராஜேந்திரன் என்பவரால் 20.03.2025 ஆம் தேதியில் காலை 11.00 மணிக்கு நாமக்கல் மாநகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வந்து தேவையான கோப்புகளை பார்வையிட்டு சென்றுள்ளார்.

அலுவலக பணியாளர்களுக்கு மதிய உணவு எடுத்துக் கொள்ள 1 மணி நேரம் வழங்கப்படுகிறது. அதன் அடிப்படையில் நாமக்கல் மாநகராட்சியில் உள்ள வசூல் மைய 2 கவுண்டர்களும் இருந்த பணியாளர்கள் மதிய உணவிற்கு சென்றிருந்த காரணத்தினால் 28.10.2024ம் நாளன்று 02.00 முதல் வசூல் பணி நடைபெறவில்லை என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 04.11.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திருமதி ஆர். விமலா சார்பாகவும் மற்றும் தனக்காகவும் மனுதாரர் டாக்டர் பா. ராஜேந்திரன் என்பவர் 04.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“1) நாமக்கல் மாநகராட்சி, சேலம் ரோடு, முருகன் கோவில் பின்புறம் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் நடைபாதை காய்கறிக் கடைகள் மூன்று Table,

Chair உடன் Steel Rack அமைத்து நிரந்தரமாக நடைபாதை காய்கறிக் கடை போட்டுக் கொள்ள நாமக்கல் மாநகராட்சி அலுவலர்களால் முறைகேடாக கடையை அனுமதி அளித்துள்ளதை அகற்ற கோரி இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஒரு கடை மட்டும் 24.10.2025 அன்று அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மற்ற ஆக்கிரமிப்புகள் இன்றுவரை அப்படியே உள்ளது.

2) மேலும், பொதிகை நகர் பகுதியில் பொது மக்களின் உயிருக்கு மிகுந்த அச்சுறுத்தலாக விளங்கும் அதிக எண்ணிக்கையில் திரியும் தெரு நாய்களின் இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த தெருநாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்வதற்காக, ரூ.8,50,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி Petcare foundation என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டது. ஆனால் அந்நிறுவனம் ரூ.8,27,708/– மட்டும் மாநகராட்சியிடம் பெற்றுக்கொண்டது. நிதி முறை கேடு நடைபெற்றுள்ளது. உதாரணமாக முதல் தொகுதியில் ஏஎஸ் பேட்டை மெயின் ரோடு பகுதியில் 01.08.2024 அன்று 2 ஆண் நாய்களுக்கும் ஒரு பெண் நாய்க்கும் ஆக மொத்தம் 3 நாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூச்சி பணிகள் வார்டு 17ல் ஏஎஸ் பேட்டை மெயின் ரோட்டில் நடத்தப்பட்டது.

ஆனால் மேற்குறிப்பிட்ட கருத்தடை மற்றும் தடுப்பூசி பணிகள் மேலே குறிப்பிட்டுள்ள நாய்களுக்கு மீண்டும் 19.10.2024 அன்றும், 25.10.2024 அன்றும், 29.11.2024 அன்றும், மேற்கொள்ளப்பட்டதாக கணக்கு காட்டப்பட்டுள்ளது. இது போன்று நாமக்கல் மாநகராட்சி எல்லா வார்டுகளிலும் ஒரு முறை கருத்தடை மற்றும் தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளப்பட்டதை வெவ்வேறு தேதிகளில் செய்யப்பட்டதாக 361 தெரு நாய்களுக்கு கணக்கு காட்டப்பட்டு முறைகேடு நடைபெற்றுள்ளது. இது குறித்து முழுமையான ஊழல் மற்றும் இலஞ்ச ஒழிப்புத் துறையின் விசாரணைக்கு உத்தரவு விட வேண்டும்.

3) பொதிகை நகர் பகுதியில் புதர் போல் மண்டியிருக்கும் புல்பூண்டுகளை அகற்றி, அபரிதமாக உள்ள கொசுத் தொல்லையை ஒழிக்கக் கோரியதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

4) பொதிகை நகர் இரண்டாவது தெருவின் முகப்பு நடுவில் இருக்கும் மின்கம்பத்தை அகற்றி, தெரு ஓரமாக மின்கம்பம் நிறுவக் கோரியும் மனுக்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் நாமக்கல் மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தற்போது தங்கள் கடமையை செய்யாமல் அது மின்வாரியத் துறையால் மேற்கொள்ள வேண்டிய பணி என ஒரு வருடத்திற்கு பிறகு தெரிவித்து திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இது மாநகராட்சி பணியாகும்.

5) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட மனுக்கள் மீதும் முழுமையான பதில் எங்களுக்கு கிடைக்கப் பெறவில்லை. உதாரணமாக 20.03.2025 அன்று நாமக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் கோப்புகளை பார்வையிட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி கோப்புகளை பார்வையிட்டேன். ஆனால் கோப்புகளில் ஒளி நகல்கள்(Xerox) பின்னர் தருவதாக உறுதி அளித்து இதுவரை எனக்கு வழங்கப்படவில்லை.

6) நாமக்கல் மாநராட்சிக்கு சொத்துவரியை உரிய காலத்தில் செலுத்த அலுவலகத்திற்கு சென்றால் அங்கு பணியாளர்கள் இருப்பதில்லை. இதனால் வரி செலுத்துவோர் நீண்ட நேரம் காத்துருந்து சொத்துவரி செலுத்த வேண்டியுள்ளது.

தெரு நாய்களின் பிரச்சனை இந்தியா முழுவதும் பெரும் பிரச்சனையாகவும் பொது மக்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும். இதில் முறைகேடு செய்து சமூக விரோத நடவடிக்கையில் நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் முதல் சம்மந்தப்பட்ட அனைவரும் ஈடுபட்டு உள்ளதால் அவர்களை சமூக விரோதிகள் என குறிப்பிட்டுள்ளேன்.

எனவே, மேற்கண்ட புகார்கள் குறித்து மனு அளித்தும் நடவடிக்கை எடுக்காத நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் முதல் அனைத்து அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மற்றும் மேற்கண்ட புகார்கள் குறித்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நாமக்கல் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்''

இத்துடன் 53 பக்கங்களுக்கான வாக்குமூலம் மற்றும் 287 எண்ணிக்கை ஆதாரங்கள் கொண்ட இரண்டு டிவிடி–க்கள், அதற்கான சான்று இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 65B–ன்படி சான்று இணைத்து சமர்ப்பித்துள்ளேன் மேலும் நடவடிக்கை விவரம் எனக்கு தெரிவிக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''.

6. மனுதாரர் திருமதி ஆர். விமலா மற்றும் டாக்டர் பா. ராஜேந்திரன் ஆகிய இருவரும் 04.11.2025 அன்று சமர்ப்பித்துள்ள பிரமாணப் பத்திரம் வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்:–

''நாமக்கல் மாவட்டம், நாமக்கல் மாநகராட்சி, சேலம் ரோடு, முருகன் கோவில் பின்புறம், போக்குவரத்துக்கு இடையூறாக ஆக்கிரமித்திருக்கும் நடைபாதை காய்கறிக்கடைகளை அப்புறப்படுத்தக் கோரியும், அதிக எண்ணிக்கையில் திரியும், தெருநாய்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுபடுத்தக் கோரியும், அபரிதமாக உள்ள கொசுத் தொல்லையை ஒழிக்கக் கோரியும், பொதிகை நகர் இரண்டாவது தெருவின் முகப்பு நடுவில் இருக்கும், மின்கம்பத்தை தெரு ஓரமாக நிறுவக் கோரியும் 9.11.2024 அன்று நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அளித்த தனது குறைகளைவு மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி திருமதி ஆர். விமலா அளித்த எழுத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுப் படிவம்–I, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.03.2025 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண் 88/மா/2025–ஆகப் பதிவு செய்யப்பட்டு உள்ளது என்பதையும், குற்றச்சாட்டுப் படிவம்–I–வுடன், அனைத்து ஆதாரங்களையும் இணைத்திருந்தோம் என்பதையும், அவை அனைத்தையும் 2 DVD–யில் Copy செய்து, தற்போது சமர்ப்பித்துள்ளோம் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாமக்கல் மாநகராட்சியில், தெரு நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில், ரூ.8,50,000/–க்கு நடந்த நிதி முறைகேடுகள் குறித்து, மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் மீது, உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி 17.09.2025 அன்று டாக்டர் பா. ராஜேந்திரன் அளித்த எழுத்தில் தாக்கல் செய்யப்பட்ட 16.09.2025 நாளிட்ட குற்றச்சாட்டுப் படிவம்–I, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில், 19.09.2025 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண் 1538/மா/2025–ஆகப் பதிவு செய்யப்பட்டு உள்ளது என்பதையும், குற்றச்சாட்டுப் படிவம்–I–வுடன், அனைத்து ஆதாரங்களையும் இணைத்திருந்தோம் என்பதையும், அவை அனைத்தையும் 2 DVD–களில் Copy செய்து தற்போது மீண்டும் சமர்ப்பித்து உள்ளோம் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

Voice Recording, Call Recording, Photos, Videos, TV News Special Report Video Recording and Daily News Paper Cuttings போன்ற அனைத்து Original ஆதாரங்களையும் 287 கொண்ட விவரப்பட்டியலை, ஒரு DVD–ல், "Namakkal Corpn1"–ல் 282 விவரப்பட்டியலும் மற்றும் 2வது DVD–ல், "Namakkal Corpn2"-ல் 5 விவரப்பட்டியலும் கொண்ட 2 DVD–களில் Copy செய்து, ஆதாரமாக தற்போது மீண்டும் இத்துடன் இணைத்து சமர்ப்பித்து உள்ளோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''

7. நாமக்கல் மாநகராட்சி தரப்பில் துப்புரவு அலுவலர் 04.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"1) நாமக்கல் மாநகராட்சி சேலம் ரோடு முருகன் கோவில் பின்புறம் உள்ள இடத்தில் தற்காலிகமாக சாலையோரம் அமைக்கப்பட்டிருந்த காய்கறி கடைகள் நாமக்கல் மாநகராட்சி அலுவலக பணியாளர்களைக் கொண்டு அப்புறப்படுத்தப்பட்டது. மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படா வண்ணம் உரிய கண்காணிப்பு நடவடிக்கை நாமக்கல் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும்.

2) நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 28.02.2025 முதல் 23.03.2025 முடிய சுற்றித் திரிந்த மொத்த 609 தெருநாய்களை பிடித்து இனப்பெருக்க கருத்தடை செய்யப்பட்டு, வெறிநாய் தடுப்பூசி அளிக்கப்பட்டு விதிகளின்படி பிடித்த இடத்திலேயே விடப்பட்டுள்ளது. நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நாமக்கல் மாநகராட்சி ஆணையரை தலைவராக கொண்டு 7 உறுப்பினர் கொண்ட ஒரு கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு தொடர் கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நாமக்கல் மாநகராட்சியில் வெவ்வேறு இடங்களில் வெவேறு தேதிகளில் நாய்களின் இனப்பெருக்கத்தை தடுக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் குறிப்பிட்டவாறு முறைகேடு ஏதும் நடைபெறவில்லை.

3) பொது இடங்களில் புதர்போல் மண்டியிருக்கும் புல் பூண்டு செடிகளை அவ்வப்போது அந்தந்த பகுதிகளில் கூட்டு தூய்மை பணி (Mass Cleaning) நடத்தி தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வாரம் ஒருமுறை சாலையோரம் படர்ந்துள்ள புல் பூண்டு செடிகள் புல் வெட்டும் கருவி மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

4) மனுதாரர் தெரிவித்துள்ள பகுதி தெரு முகப்பில் அமைந்துள்ள தெருவிளக்கு கம்பத்தினை அப்புறப்படுத்துதல் என்பது தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாகும். நாமக்கல் மாநகராட்சியால் மேற்கொள்ள வழிவகை இல்லை. மேலும், மேற்படி தெருவிளக்கு கம்பத்தினால் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் இல்லை.

5) முறையீட்டாளரின் கணவரான திரு. டாக்டர் ராஜேந்திரன் என்பவரால் அனுப்பி வைக்கப்பட்ட 18.01.2025ம் தேதியிட்ட தகவல் உரிமை சட்டம் 2005ன் மனுவிற்கு உரிய தகவல் மனுதாரருக்கு 17.02.2025 அன்று அனுப்பப்பட்டு, மனுதாரரால் 21.02.2025 அன்று பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மனுதாரரின் கணவர் திரு. டாக்டர் ராஜேந்திரன் என்பவரால் 20.03.2025 ஆம் தேதியில் காலை 11.00 மணிக்கு நாமக்கல் மாநகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வந்து தேவையான கோப்புகளை பார்வையிட்டு சென்றுள்ளார். மனுதாரர் கோரிய நகல்கள் இப்பொருள் தொடர்பான கோப்பின் நடவடிக்கை முறைமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரருக்கு நகல்கள் வழங்கப்படவில்லை. மனுதாரரின் கோரிக்கை மீது முறைமன்ற ஆணை பெறப்பட்டபின் உரிய நகல்கள் வழங்கப்படும்.

6) அலுவலக பணியாளர்களுக்கு மதிய உணவு எடுத்துக் கொள்ள 1 மணி நேரம் வழங்கப்படுகிறது. அதன் அடிப்படையில் நாமக்கல் மாநகராட்சியில் உள்ள வசூல் மைய 2 கவுண்டர்களும் இருந்த பணியாளர்கள் மதிய உணவிற்கு சென்றிருந்த காரணத்தினால் 28.10.2024ம் நாளன்று 02.00 மணி முதல் வசூல் பணி நடைபெறவில்லை என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்."

மேலும் நாமக்கல் மாநகராட்சி ஆணையரின் 31.10.2025 நாளிட்ட கடிதத்தினை முறைமன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கின்றேன்."

8. நாமக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 31.10.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

திருமதி விமலா, க/பெ பா. ராஜேந்திரன் அவர்களின் 01.03.2025ஆம் தேதிய முறையீட்டு மனு மற்றும் டாக்டர் பா. ராஜேந்திரன், த/பெ மு. பாலு 16.09.2025ஆம் தேதிய முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக நாமக்கல் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்களை முறையீட்டுதாரர்களுக்கு அனுப்பப்பட்டு அதன் நகல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்களுக்கு உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

<u>சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் :</u>

(1) திரு. டாக்டர் பா. ராஜேந்திரன், த/பெ மு. பாலு என்பவருக்கு அனுப்பப்பட்ட இதே எண்ணிட்ட 30.10.2025ஆம் தேதியிட்ட இவ்வலுவலக பதில் கடிதம்.

(2) திருமதி ரா. விமலா க/பெ பா. ராஜேந்திரன் என்பவருக்கு அனுப்பப்பட்ட இதே எண்ணிட்ட 30.10.2025ஆம் தேதியிட்ட இவ்வலுவலக பதில் கடிதம்.

(3) நாமக்கல் மாநகராட்சியின் தொடர்புடைய ஒப்பந்தப்புள்ளி நகல்

(4) நாமக்கல் மாநகராட்சி செயல்முறை உத்தரவு ந.க. எண் 4627/2022/எச்1, நாள் 03.07.2024ஆம் தேதிய நகல்

(5) தமிழ்நாடு கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அரசாணை (4D) எண். 1, நாள் 17.03.2023இன் நகல்.

(6) நாமக்கல் மாநகராட்சியில் 01.08.2024 முதல் 17.08.2024, 19.10.2024 முதல் 02.11.2024 மற்றும் 11.11.2024 முதல் 09.12.2024 மூன்று கட்டங்களாக தெருநாய்களை பிடித்து ARVதடுப்பூசி வழங்கப்பட்டு, கருத்தடை அறுவை சிகிச்சை செய்த விவரங்கள்.

(7) நாமக்கல் மாநகராட்சியில் தெருநாய்களை பிடித்ததற்கும், கருத்தடை அறுவை சிகிச்சை செய்ததற்கானபுகைப்படங்கள்.

(8) நாமக்கல் மாநகராட்சியில் விலங்குகள் பிறப்பு கட்டுப்பாடு திட்டத்தின் கண்காணிப்பு குழுவில் உள்ள உறுப்பினர்கள் கையொப்பம் செய்த பதிவேட்டின் நகல்

(9) 13.05.2025 அன்று பொதிகை நகரில் காய்கறி கடை இருந்த பொழுது எடுக்கப்பட்ட படங்கள்.

(10) 25.10.2025 அன்று பொதிகை நகரில் புகாரில் தெரிவிக்கப்பட்ட மின்கம்பத்தினை நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர், துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர்களால் ஆய்வு செய்யப்பட்ட பொழுது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.

(11) புகாரில் தெரிவிக்கப்பட்ட காய்கறி கடைகள் நடைபெற்ற இடத்தினை நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்ட பொழுது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.

(12) பொதிகை நகர் பகுதிகளில் புல், பூண்டு செடிகளை புல் வெட்டும் இயந்திரம் மூலம் நாமக்கல் மாநகராட்சி பணியாளர்களால் 30.10.2025 அன்று அகற்றப்பட்ட பொழுது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.

(13) 24.09.2025 அன்று பொதிகை நகர் பகுதிகளில் சுற்றித் திரியும் தெருநாய்களை பிடிக்கும் பொழுது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.

(14) திருமதி ரா. விமலா மற்றும் திரு. பா. ராஜேந்திரன் ஆகிய இருவரால் நாமக்கல் மாநகராட்சியிலிருந்து அனுப்பப்பட்ட 30.10.2025ஆம் பதில் கடிதத்தினை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் நகல்.'' எனத் தெரிவித்துள்ளார்.

9. முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனுக்கள், வாக்குமூலம், பிரமாணப் பத்திரம், நாமக்கல் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் துப்புரவு அலுவலரின் வாக்குமூலம், புகைப்படங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

நாமக்கல் மாநகராட்சி, சேலம் ரோடு, முருகன் கோவில் பின்புறம் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் நடைபாதை காய்கறிக் கடைகளை அகற்ற கோரி அளித்த மனு மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், பொதிகை நகர் பகுதியில் பொது மக்களின் உயிருக்கு மிகுந்த அச்சுறுத்தலாக விளங்கும் அதிக எண்ணிக்கையில் திரியும் தெரு நாய்களின் இனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த தெருநாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளும் பணியில் நாய்களுக்குக் கருத்தடை மற்றும் தடுப்பூசி மேற்கொள்ளாமலேயே அவை மேற்கொண்டதாகத் தெரிவித்து, நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகிய இருவரும் மிகப் பெரும் முறைகேடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளதும், இது குறித்து முழுமையான ஊழல் மற்றும் இலஞ்ச ஒழிப்புத் துறையின் விசாரணைக்கு உத்தரவு விட வேண்டும் என்பதும், பொதிகை நகர் பகுதியில் புதர் போல் மண்டியிருக்கும் புல்பூண்டுகளை அகற்றி, அபரிதமாக உள்ள கொசுத் தொல்லையை ஒழிக்கக் கோரியதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், பொதிகை நகர் இரண்டாவது தெருவின் முகப்பு நடுவில் இருக்கும் மின்கம்பத்தை அகற்றி, தெரு ஓரமாக நிறுவக் கோரி மனுக்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் நாமக்கல் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை என்பதும், நாமக்கல் மாநகராட்சிக்கு சொத்துவரியை உரிய காலத்தில் செலுத்த அலுவலகத்திற்கு சென்றால் அங்கு பணியாளர்கள் இல்லாததால் வரி செலுத்துவோர் நீண்ட நேரம் காத்திருந்து சொத்துவரி செலுத்த வேண்டியுள்ளது என்பதும், மேற்கண்ட புகார்கள் குறித்து மனு அளித்தும் நடவடிக்கை எடுக்காத நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் முதல் அனைத்து அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மற்றும் மேற்கண்ட புகார்கள் குறித்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் நாமக்கல் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரியிருப்பது மனுதாரர்களின் மனுக்கள் மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

நாமக்கல் மாநகராட்சி, சேலம் ரோடு, முருகன் கோவில் பின்புறம் உள்ள இடத்தில் தற்காலிகமாக சாலையோரம் அமைக்கப்பட்டிருந்த காய்கறி கடைகள் நாமக்கல் மாநகராட்சி அலுவலக பணியாளர்களைக் கொண்டு அப்புறப்படுத்தப்பட்டு, மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படா வண்ணம் உரிய கண்காணிப்பு நடவடிக்கை நாமக்கல் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்பதும், நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 28.02.2025 முதல் 23.03.2025 முடிய சுற்றித் திரிந்த மொத்தம் 609 தெருநாய்களை பிடித்து இனப்பெருக்க கருத்தடை செய்யப்பட்டு, வெறிநாய் தடுப்பூசி அளிக்கப்பட்டு விதிகளின்படி பிடித்த இடத்திலேயே விடப்பட்டுள்ளது என்பதும், நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நாமக்கல் மாநகராட்சி ஆணையரை தலைவராக கொண்டு 7 உறுப்பினர் கொண்ட ஒரு கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு தொடர் கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், மனுதாரர் குறிப்பிட்டவாறு முறைகேடு ஏதும் நடைபெறவில்லை என்பதும், பொது இடங்களில் புதர்போல் மண்டியிருக்கும் புல் பூண்டு செடிகளை அவ்வப்போது அந்தந்த பகுதிகளில் கூட்டு தூய்மை பணி (Mass Cleaning) நடத்தி தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வாரம் ஒருமுறை சாலையோரம் படர்ந்துள்ள புல் பூண்டு செடிகள் புல் வெட்டும் கருவி மூலம் அகற்றப்பட்டு வருகிறது என்பதும், மனுதாரர் தெரிவித்துள்ள பகுதி தெரு முகப்பில் அமைந்துள்ள

தெருவிளக்கு கம்பத்தினை அப்புறப்படுத்துதல் என்பது தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணி என்பதால், நாமக்கல் மாநகராட்சியால் மேற்கொள்ள வழிவகை இல்லை என்பதும், மேற்படி தெருவிளக்கு கம்பத்தினால் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் இல்லை என்பதும், முறையீட்டாளரின் கணவரான டாக்டர் ராஜேந்திரன் என்பவரால் அனுப்பி வைக்கப்பட்ட 18.01.2025ம் தேதியிட்ட தகவல் உரிமை சட்டம் 2005ன் மனுவிற்கு உரிய தகவல் மனுதாரருக்கு 17.02.2025 அன்று அனுப்பப்பட்டு, மனுதாரரால் 21.02.2025 அன்று பெறப்பட்டு, மனுதாரரின் கணவர் டாக்டர் ராஜேந்திரன் என்பவரால் 20.03.2025 ஆம் தேதியில் காலை 11.00 மணிக்கு நாமக்கல் மாநகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வந்து தேவையான கோப்புகளை பார்வையிட்டு சென்றுள்ளார் என்பதும், மனுதாரர் கோரிய நகல்கள் இப்பொருள் தொடர்பான கோப்பின் நடவடிக்கை முறைமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரருக்கு நகல்கள் வழங்கப்படவில்லை என்பதும், மனுதாரரின் கோரிக்கை மீது முறைமன்ற ஆணை பெறப்பட்டபின் உரிய நகல்கள் வழங்கப்படும் என்பதும், நாமக்கல் மாநகராட்சி அலுவலக பணியாளர்களுக்கு மதிய உணவு எடுத்துக் கொள்ள 1 மணி நேரம் வழங்கப்படுவதால், வசூல் மைய 2 கவுண்டர்களிலும் இருந்த பணியாளர்கள் மதிய உணவிற்கு சென்றிருந்ததால், 28.10.2024ம் நாளன்று 02.00 மணி முதல் வசூல் பணி நடைபெறவில்லை என்பதும் நாமக்கல் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் துப்புரவு அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில்,

(1) நாமக்கல் மாநகராட்சி, சேலம் ரோடு, முருகன் கோவில் பின்புறம் உள்ள இடத்தில் தற்காலிகமாக சாலையோரம் ஆக்கிரமிப்பில் இருந்து அகற்றப்பட்ட காய்கறி கடைகளை மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படா வண்ணம் உரிய கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவித்திருந்தாலும், அவ்விடத்தினையும் மற்றும் நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட ஏனைய பகுதிகளையும் மாநகராட்சி பணியாளர்களைக் கொண்டு அடிக்கடி கள ஆய்வு செய்து எவ்வித ஆக்கிரமிப்பு இல்லாமல் இருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்,

(2) பொது இடங்களில் புதர்போல் மண்டியிருக்கும் புல் பூண்டு செடிகளை அவ்வப்போது அந்தந்த பகுதிகளில் கூட்டு தூய்மை பணி (Mass Cleaning) நடத்தி தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வாரம் ஒருமுறை சாலையோரம் படர்ந்துள்ள புல் பூண்டு செடிகள் புல் வெட்டும் கருவி மூலம் அகற்றப்பட்டு வருவது குறித்து நாமக்கல் மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் தொடர் கண்காணிப்பு செய்திடவும்,

(3) மனுதாரர் தெரிவித்துள்ள பகுதியின் தெரு முகப்பில் அமைந்துள்ள தெருவிளக்கு கம்பத்தினால் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் இருந்தாலும், இக்கம்பம் தொடர்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் கலந்தாலோசித்து, அதனை அப்புறத்த வேண்டுமா என்பதை ஆராய்ந்து உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்,

(4) முறையீட்டாளரின் கணவரான டாக்டர் ராஜேந்திரன் என்பவரால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய தகவல்கள் இப்பொருள் தொடர்பான கோப்பின் நடவடிக்கை முறைமன்றத்தில் நிலுவையில் இருந்தாலும் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 8(1)(ஆ)–ன்படி நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தினால் வெளிப்படையாக வெளிப்படுத்துவதற்கு தடை செய்யப்பட்ட தகவலை மட்டுமே வெளியிடுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது என்பதை கருத்தில் கொண்டு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்,

(5) நாமக்கல் மாநகராட்சியில் இரண்டு வரிவசூல் கவுண்டர்கள் இருக்கும் போது, மதிய உணவிற்கு பணியாளர்கள் ஒரே நேரத்தில் செல்லாமல், ஏதேனும் ஒரு கவுண்டரில் ஒருவர் இருந்து வரிவசூலை வசூலிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்,

மேலும், தெரு நாய்கள் தொடர்பாக மத்திய மற்றும் மாநில அரசு விதிமுறைகளின்படியும் மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படியும் மனுதாரர் புகார் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், நாமக்கல் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேற்கண்ட 5 இனங்களும் சரிவர செயல்படுத்தப்படுகின்றதா என்பதை ஒரு சிறப்புக் குழு அமைத்து, கண்காணிக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பரிந்துரை செய்து ஆணையிடப்படுகின்றது.

நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 28.02.2025 முதல் 23.03.2025 முடிய சுற்றித் திரிந்த மொத்தம் 609 தெருநாய்களுக்கு இனப்பெருக்க கருத்தடை மற்றும் வெறிநாய் தடுப்பூசியினை ஒப்பந்ததாரான Petcare foundation என்ற நிறுவனத்திற்கு பணி ஒப்படைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதில், அரசிற்கு நிதி இழப்பு ஏற்பட்டிருக்கிறதா என்றும், நடைமுறை விதி மீறல்கள் உள்ளதா என்பது குறித்தும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் மூலம் சிறப்பு தணிக்கை மேற்கொண்டு அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திருமதி ஆர். விமலா,
க/பெ டாக்டர் பா. ராஜேந்திரன்,13–A இரண்டாவது தெரு, பொதிகை நகர்,
முருகன் கோவில் பின்புறம், சேலம் ரோடு, நாமக்கல்–637 001.

(2) டாக்டர் பா. ராஜேந்திரன்,
13–A இரண்டாவது தெரு, பொதிகை நகர்,முருகன் கோவில் பின்புறம்,
சேலம் ரோடு, நாமக்கல்–637 001.

(3) ஆணையாளர்,
நாமக்கல் மாநகராட்சி, நாமக்கல்.

(4) இயக்குநர்,
உள்ளாட்சி நிதி தணிக்கை துறை, பேராசிரியர் க.அன்பழகன் மாளிகை,
4வது தளம், நந்தனம், சென்னை–600 035.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

23/2/26